11th March 1969]

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : கனம் உறுப்பினர் அவர்கள் இப்படிப்பட்ட தவறான கருத்துக்களின் மூலம் தன்னைத் தானே குழப்பிக்கொண்டு இன்னும் பல கேள்விகள் கேட்க முன் வருவார் என்று கருதுகிறேன். பள்ளத்தை மேடாக்கி தாங்களே வீடுகளைக் கட்டிக் கொள்கிறோம் என்றால் அரசாங்கம் அதற்குக் குறுக்கில் நிற்காது. பள்ளம் மேடாக வேண்டுமென்றும் அதற்கான பணம் அரசாங்கம் தரவேண்டுமென்றும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே கடந்த கால அரசு தஞ்சை நிலத்தை, 3, 4 அடி பள்ளமான நிலத்தை, அரிஜன மக்களுக்கு வீடுகள் கட்ட வேண்டுமென்று ஆர்ஜிதம் செய்து அதற்கு பேலும் லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவாகுமென்று அந்தப் பள்ளங்களை மூடாமலும் அவர்களும் வீடுகள் கட்டாமலும் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட வகையில் ஜில்லா வாரியாக பல லட்சக்கணக்கான ரூபாய் அரசாங்கத்திற்கு செலவாகிக்கொண்டு இருக்கிறது. மக்கள் முன் வந்து தாங்களே மேடாக்கிக் கொள்கிறோம் என்றால் தாராளமாகச் செய்து கொள்ளலாம்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு** : மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் சேர்ந்து உருவாக்கும் திட்டத்தில், மாநில அரசுக்கு கொடுக்கவேண்டிய கடனை எத்தனை ஆண்டுகளில் திருப்பித் தர வேண்டும் ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : 15 ஆண்டுகளில் திருப்பித் தருவதற்காகும்.

Palayamkottai-Melapalayam Drinking Water Supply Scheme.

*186. Q. THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) whether the Palayamkottai Municipality has requested the division, into two, of the Drinking Water Supply Scheme common to both the Municipalities of Palayamkottai and Melapalayam; and

(b) if so, the action taken thereon?

**பாளையங்கோட்டை–மேலப்பாளையம் நீர் வழங்கும் திட்டம்**

**திரு. என். ஆர். தியாகராஜன்** : மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பாளையங்கோட்டை, மேலப்பாளையம் ஆகிய இரு நகர சபைகளுக்குப் பொதுவாக உள்ள குடி தண்ணீர் திட்டத்தை இரு பிரிவாக பிரிக்கும்படி பாளையங்கோட்டை நகராட்சி கோரியதா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : (அ) ஆம்.

(இ) பாளையங்கோட்டை மேலப்பாளையம் நகராட்சிக்கான ஒருங்கிணைந்த நீர் வழங்கு திட்டத்தைத் தனித்தனியாகப் பிரிப்பதற்கும் அதை திருத்தியமைப்பதற்குமான கருத்துருவை அரசு இப்போதைக்கு நிறுத்தி வைக்கத் தீர்மானித்திருக்கிறது.